# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்
# Our Lady of Deliverance Tamil Catholic Mission

எமது பங்குச் சபையின் நான்காவது கூட்டம் 24-05-2009 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு ஆலய சிறிய மண்டபத்தில் பங்குத்தந்தையின் செபத்துடன் ஆரம்பமானது. இக்கூட்டத்திற்கு பங்குச்சபையின் 12 உறுப்பினர்கள் சமூகம் தந்திருந்தனர். திரு. மோசஸ் சூசைமாணிக்கம், திரு. நெல்சன் ஆரோக்கியநாதர், செல்வன். சார்ள்ஸ் அமிர்தநாதர் ஆகியோர் சமூகம் தரவில்லை. செயலாளர் திரு. நெல்சன் ஆரோக்கியநாதர் சமூகம் தராததால் உப செயலாளர் திரு. பாக்கியநாதர் அமிர்தநாதரால் கடந்த கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. பின்பு வயோதிபரின் போக்குவரத்துக்கென திருவாளர் றொபின் யேசுதாசன் ஒரு பஸ் வண்டி வாங்கித் தருவதற்குத் தயாராக இருப்பதாக தெரிவித்தது பற்றியும், ஆனால் அதைப் பராமரிப்பதில் இருக்கக்கூடிய நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக தற்போதைக்கு அவ்விடயம் ஒத்திப்போடப்பட்டது பற்றியும், அத்துடன் பங்குச்சபை உறுப்பினர்கள் அவரவர் பிரதிநிதித்துவம் செய்யும் பணிகளைப் பற்றி ஒவ்வொரு கூட்டத்திலும் 5 நிமிடங்கள் வரையிலான சிறிய அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தால், அது பணிகளின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும் என முன்னைய கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவை, உறுப்பினர்கள் விரும்பினால் மட்டுமே சமர்ப்பிக்கலாம் என மாற்றப்பட்டது பற்றியும் கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை, என்று சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து, பின்பு அறிக்கையில் அது இணைத்துக்கொள்ளப்பட்டது. அதன்பிற்பாடு அவ்வறிக்கை சரியென திரு. அலெக்ஸ் மார்க்கண்டு முன்மொழிய, திரு. தேவதாஸ் வழிமொழிந்தார்.

அடுத்து அன்றைய நிகழ்ச்சி நிரலின்படி, தூயஆவியின் திருநாளுக்கு முன்னைய சனிக்கிழமை இரவு, அதற்கான ஆயத்தங்கள் ஏற்கெனவே செய்யப்பட்டு விட்டதால் திருவிழிப்பு திட்டமிட்டபடி நடக்க இருப்பதாகவும், அதை வழமைபோல புதுவாழ்வு ஊழியத்தினர் பொறுப்பேற்று நடாத்துவார்கள் என்றும் பங்குத்தந்தை அறியத் தந்தார். திருவிழிப்பு ஆராதனைக்கு **Toronto** விலிருந்து ஆட்கள் வருகைதர இருப்பதாகவும், ஞாயிற்றுக்கிழமை உறுதிப்பூசுதல் திருவருட்சாதனத் திருப்பலி நிறைவேற்றப்பட இருப்பதனால், திருவிழிப்பை நேரத்தோடு நிறைவு செய்து கொள்வதாகவும் திரு. யூலியன் ஜெயரட்ணம் அவர்கள் கூறினார்.

நிகழ்ச்சி நிரலின்படி, புனித அந்தோனியார், தம் வாழ்க்கையிலே தேவநற்கருணையின் முக்கியத்துவத்தை போதித்து வந்தமையால், சனிக்கிழமை 13-06-2009 அன்று நற்கருணை ஆசீர்வாதமும், திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும் என்றும், ஞாயிற்றுக்கிழமை 14-06-2009 காலை திருநாள் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும் என்றும் பங்குத்தந்தை கூறினார்.

நிகழ்ச்சி நிரலின் 5வது பிரிவின்படி, 06-06-2009 சனிக்கிழமை திருப்பலியை மலைக்கோவிலில், வன்னியில் போர் அனர்த்தங்களினால் இறந்துபோன அனைத்து மக்களுக்களினதும், குருக்களுக்களினதும் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுக்கலாம் என்று பங்குத் தந்தை கூறிய பொழுது, அனைத்து தமிழ்மக்களும் அதில் கலந்துகொள்ளும் பொருட்டு வானொலியில் ஒரு அறிவித்தல் கொடுக்கலாம் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

## ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 24-05-2009

# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்
# Our Lady of Deliverance Tamil Catholic Mission

அத்திருப்பலிக்கு அருட்தந்தை ஞானரெட்ணம் அடிகளாரை அழைக்கலாம் என்றும் பங்குத் தந்தை ஆலோசனை கூறினார். வன்னியில் உள்ள ஆதரவற்ற பிள்ளைகளுக்கு மிகவும் அவசியமாக உதவிகள் தேவைப்படுவதாகவும், அவை இரண்டு கட்டத்தேவைகளாக இருப்பதாகவும், அவையாவன,

1) உடனடித் தேவை
2) நீண்டகாலத் தேவை,

என்றும், அவற்றிற்கு எம்மால் என்ன பங்களிப்புச் செய்யமுடியும்? என்று பங்குத் தந்தை வினவியதற்கு பதிலளித்த திரு. யூலியன் ஜெயரட்ணம், நீண்ட காலத்தேவைகளுக்கான திட்டமொன்றை நம் நாட்டில் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பெறுமிடத்து, அரசாங்கம், மற்றும் சர்வதேச உதவிநிறுவனங்களிடமிருந்தும் உதவிகளைப் பெற்று அத்திட்டத்தை செயற்படுத்த முடியம் என்றும், இவை பற்றி எதிர்காலத்தில் விபரமாக ஆராயலாம் என்றும் கூறினார்.

ஆலயத்தின் கூரையைச் சுற்றியுள்ள உலோகத்திற்க்கு துருஎதிர்ப்பு வர்ணம் பூசுவதற்கு காலநிலையைப் பொறுத்து நாளைத் தீர்மானிப்பது என்றும், அதற்கு அனைவரும் ஒத்தழைப்புத் தருவதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கூட்டமுடிவில் அனைத்து உறுப்பினர்களும் சென்று செய்யப்பட வேண்டிய வேலையைப் பார்வையிடுவதாக ஒத்துக்கொள்ளப்பட்டது. தவக்கால உண்டியற் பணம் எண்ணி ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. நிழ்ச்சி நிரலின் கடைசிப் பிரிவின்படி, UCMAS (ABAKKAS) என்னும் கல்விமுறை, நம் சிறார்களின்( 4வயது முதல் 12 வயது வரையிலான) சிந்தனை சக்தியைத் தூண்டும் வகையில் பயிற்றுவிக்கப்படலாம் என்றும், அதற்க்கு Toronto விலிருந்து வந்து அதற்கான விளக்கங்கள் கொடுக்கப்பட இருப்பதாகவும் பங்குத்தந்தை கூறியபொழுது, ஞாயிறு திருப்பலியின்பின் அந்த அறிவித்தலைக் கொடுத்தால் விரும்பியவர்கள் அதில் கலந்து பலனடைய முடியும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

**Canteen** ஐத் தொடர்ந்து நடாத்த வேண்டும் என்றும், சம்பந்தப்பட்டவர்களுக்கு வசதியீனங்கள் ஏற்படின் சமூகநலப்பணிக்குப் பொறுப்பான திருமதி கலிஸ்ரா தவராஜாவிடம் அதுபற்றி அறியத்தந்து ஆவன செய்யலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

இறுதியாக, திரு. அல்பிரட் ஞானராஜா அவர்களின் இறுதிச்செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

அருட். தந்தை அன்றூ தவராஜசிங்கம்
பங்குத்தந்தை
மீட்பின் அன்னை மறைத்தளம்

திரு. பாக்கியநாதர் அமிர்தநாதர்
உப செயலாளர் (பங்குச்சபை)
மீட்பின் அன்னை மறைத்தளம்

**ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 24-05-2009**